IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.167/2023

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | **சதீஷ்** |
| FATHER NAME | - | **கேசவன்** |
| VILLAGE | - | **நேரு நகர், சத்துவாச்சாரி** |
| TALUK | - | **வேலூர்** |
| OCCUPATION | - | ஓட்டுநர் |
| AGE | - | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.11.2025.

2, 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 1, 5, 6 ஆஜரில்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் நேரு நகர் சத்துவாச்சாரியில் குடியிருக்கிறேன். கார் ஓட்டுநராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. பிரபு, யுவராஜ்ஆகியோர்களை எனக்கு தெரியாது. நான் காவல் துறை நண்பனாக 2016 ல் பணிபுரிந்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. இறந்த செல்வராஜை எனக்கு யார் என்று தெரியாது. நான் காவல் துறை நண்பன் என்பதால் போலீசார் கையெழுத்து கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)**

<u>குறுக்கு விசாரணை-அரசு தரப்பில்</u>

20.04.2019 இரவு 8.30 மணிக்கு நான் எங்கள் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது ஒரு மோட்டார் சைக்கிளில் சத்துவாச்சாரி மந்தவெளி பகுதியை சேர்ந்த பிரபுவும் உடனிருந்தவர் பெயர் யுவராஜ் என பிரபு அறிமுகப்படுத்தினார் என்றும்

அப்போது பிரபு சட்டையிலிருந்த இரத்தக் கறையை பற்றி கேட்க நானும் யுவராஜ் மற்றும் கணேசனும் சேர்ந்து ஆவின் பால் பண்ணை அருகே செல்வராஜை போட்டு தள்ளிவிட்டோம் என்றும் அப்போது பொதுமக்கள் வந்ததால் தனித்தனியாக பிரிந்து சென்றுவிட்டோம் என்றும் ஏன் செல்வராஜை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அடிக்கடி எங்கள் விஷயத்தில் தலையிடுவதால் போட்டு தள்ளிவிட்டோம் என்று சொன்னார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 24.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.24 19:42:40 +0530

Additional District Judge(FTC),
Vellore